


15. 08. 2026

## தலைப்புச் செய்திகள்

- நாட்டின் 80-வது சுதந்திர தினத்தை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி டெல்லி செங்கோட்டையில் இன்று தேசிய கொடியை ஏற்றிவைத்து முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.
- பொதுத்தேர்வுகளில் ஏழை, எளிய மாணவர்கள் சிறப்பாக செயலாற்றுவதற்கான இலவச ஆன்லைன் பயிற்சி திட்டத்தை பிரதமர் அறிவித்துள்ளார்.
- சென்னை கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் தேசிய கொடியை ஏற்றிவைத்தார்.
- விடுதலை பேராட்ட தியாகிகளின் ஒய்வூதியம் 23 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் படுவதாக முதலமைச்சர் அறிவித்தார்.
- தமிழகத்தின் அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

### சுதந்திர தினம்

நாட்டின் 80-வது சுதந்திர தினம் இன்று உற்சாகத்துடனும், கோலாகலத்துடனும் கொண்டாடப்படுகிறது.

தலைநகர் தில்லி செங்கோட்டையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தேசிய கொடியை ஏற்றிவைத்து சுதந்திர தின கொண்டாட்டங்களை தொடங்கிவைத்தார்.

முதல்முறையாக சுதந்திர தினத்தில் வந்தே மாதரம் தேசிய பாடல் இன்று இசைக்கப்பட்டது.

.. வந்தே மாதரம் மியூசிக் ..

அதனைத் தொடர்ந்து 21 குண்டுகள் முழங்க பிரதமர் தேசிய கொடியை ஏற்றி வைத்தார்.

தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.

.. ஜனகன மன மியூசிக் ..

தேசிய கொடியை பிரதமர் ஏற்றிய போது இந்திய விமான படையினரின் MI – 17 ரக ஹெலிகாப்டர்கள் மூலம் வானிலிருந்து வண்ணமலர்களின் பூ இதழ்கள் தூவப்பட்டன.

.. மியூசிக் ..

முன்னதாக முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை பிரதமர் ஏற்றுக்கொண்டார்.

.. மியூசிக் ..

செங்கோட்டையிலிருந்து நாட்டின் 80-வது சுதந்திர தின உரையாற்றிய பிரதமர், முதல்முறையாக வந்தேமாதரம் செங்கோட்டையில் ஒலிப்பது குறித்து பெருமிதம் வெளியிட்டார்.

தீர்க்கமான முடிவுடனும், திறன் வளர்ச்சியுடனும், முன்னேறும் போது ஒருநாடு சிறப்படைவதாக அவர் எடுத்துரைத்தார்.

கடந்த 12 ஆண்டுகளில் கோடிக்கணக்கான மக்கள் அர்ப்பணிப்புடன் நாட்டை புதிய உச்சங்களுக்கு எடுத்துச்சென்றதாக குறிப்பிட்டார்.

25 கோடி பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டு உலகளாவிய 4-வது வேகமான பொருளாதார வளர்ச்சி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

2047-ம் ஆண்டிற்குள் வளர்ந்த நாடாக உயர்வதற்கான மிகப்பெரிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பல்வேறு துறைகளின் வளர்ச்சியை எடுத்துரைத்த அவர், கடந்த 12 ஆண்டுகளில் இராணுவ உற்பத்தி 4 மடங்காகவும்,

காதி கிராம தொழில்கள் உற்பத்தி 5 மடங்காகவும்,

மின்னணு உற்பத்தி 7 மடங்காகவும்,

ரயில் பெட்டிகள் உற்பத்தி 21 மடங்காகவும்,

கைப்பேசி உற்பத்தி 33 மடங்காகவும் அதிகரித்துள்ளது என்றார்.

.. வாய்ஸ் ..

இணையதள பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை நான்கு மடங்காகவும்,

மின்னணு பணப்பரிவர்த்தனை 100 மடங்காகவும் உயர்ந்துள்ளது என்றும் பிரதமர் எடுத்துரைத்தார்.

மேற்காசியா, உக்ரைன், கோவிட் 19 பெருந்தொற்று சவால்களின் மத்தியிலும், சீர்மிகு கொள்கைகள் தயாரிப்பு, ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளால் நம்நாடு வெற்றிகரமான செயல்பட்டதாக கூறினார்.

நம்நாட்டின் திறன், கட்டமைப்புகளின் காரணமாக போதுமான பெட்ரோலிய எரிபொருட்கள், இயற்கை எரிவாயு, உரங்கள் விநியோகம் சாத்தியமானதாக அவர் எடுத்துரைத்தார்.

அணுகமுடியாத மண்டலங்களை. அணுகும் பகுதிகளாக மேம்படுத்தி 99 சதவிகித கடலோர பகுதிகளில் புதிய வளங்களை கண்டறிவதற்கான அகழாய்வு பணிகளை மேற்கொண்டு வருவதாக அவர் எடுத்துரைத்தார்.

100 ஜிகாவாட் அணுமின் திறனை இன்னும் 20 ஆண்டுகளில் மேம்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாகவும், நடப்பு 10 ஆண்டில் 5 புதிய அணு ஆலைகளை தொடங்க திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார்.

அதிவிரைவு பெருக்க அணுஉலை தொழில் நுட்பத்தின் மூலம் அணு சக்தியில் தன்னிறைவை பெறுவதற்கான முயற்சிகளை நாடு மேற்கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

40 நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் எட்டப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

7 அம்ச சப்ததாரா சீர்த்திருத்தின் கீழ் உற்பத்தி, வேளாண்மை, உணவு தானிய உற்பத்தி, படைப்பாற்றல் திறன் மேம்பாடு, பசுமை பொருளாதாரம், நீல பொருளாதாரம், மென்பொருள் ஆகிய ஏழு பிரிவுகளையும் புதிய உயரங்களுக்கு அரசு கொண்டு செல்வதற்கான முன்னெடுப்புகளை அரசு மேற்கொண்டுள்ளதாக அவர் தொிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் உலகளாவிய நாடாக இந்தியா உருவெடுக்கும் வகையில், ஒருகோடி இளைஞர்களுக்கு அடுத்த ஓராண்டில் செயற்கை நுண்ணறிவு சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாக கூறினார்.

கிராமங்கள், நகரங்கள், பள்ளிகளில் 5 முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகளின் திறமைகள் கண்டறியப்பட்டு சிறப்பு பயிற்சிகள் மூலம் விளையாட்டுத் துறையில் சாதனையாளர்களாக மேம்படுத்தப்படுவார்கள் என்றார்.

2030-ம் ஆண்டு காமன்வெல்த் போட்டிகளை இந்தியாவே ஏற்று நடத்தும் என்றார்.

ஏழை, எளிய மாணாக்கர், நடுத்தர குடும்பங்களை சேர்ந்தவர்கள் பொதுத்தேர்வுகளில் மாணவர்கள் சிறப்பாக செயலாற்றுவதற்கான இலவச ஆன்லைன் பயிற்சிகள் வழங்கும் புரட்சிகர திட்டத்தை அரசு தொடங்க இருப்பதாக கூறினார்.

அனைவருக்கும் தரமான கல்வி கிடைப்பதை நோக்கமாக கொண்டு செயல்படுத்தப்படும் இந்த திட்டத்தின் கீழ்

தலைசிறந்து ஆசிரியர்களை கொண்டு பயிற்சிகள் நடத்தப்படும் என்றார்.

இதன்மூலம் நடுத்தர குடும்பத்தினர் பயிற்சிக்காக செலவிடும் கோடிக்கணக்கான பணம் சேமிக்கப்படும் என்றார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பில் சரியான தகவல்களை டிஜிட்டல் முறையில் வழங்கும் பணிகளில் இளைஞர்கள் பங்காற்ற வேண்டுமென்றும் பிரதமர் அறிவுறுத்தினார்.

பிரதமரின் உரையை தொடர்ந்து செங்கோட்டையில் சுதந்திர தின விழா இனிதே நிறைவடைந்தது.

முன்னதாக பிரதமர் ராஜ்காட்டில் தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளுக்கு அஞ்சலி செலுத்தினார்.

.. வாய்ஸ் ..

பஞ்சாப் மாநிலம் அம்ரித்சரில் அமைந்துள்ள சர்வதேச சிறப்பு வாய்ந்த அடாரி வாகா எல்லை சோதனைச்சாவடியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் எல்லை பாதுகாப்பு படையின் துணை தலைமை இயக்குநர் திரு. எஸ்.எஸ். ச்சந்தல், தேசிய கொடியை ஏற்றிவைத்து எல்லைப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

முதலமைச்சர்

சென்னை கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் தேசிய கொடியை ஏற்றிவைத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

.. மியூசிக் ..

ஊழல் இல்லா தமிழகத்தை உருவாக்க அரசு செயலாற்றி வருவதாக முதலமைச்சர் கூறினார்.

விடுதலை பேராட்ட வீரர்களின் குடும்பத்தினரின் ஓய்வூதியம் 23 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் படுவதாகவும்,

குடும்ப ஓய்வூதியம் 12 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தப் படுவதாக அறிவித்தார்.

முன்னாள் படைவீரர் மகள்களின் திருமண உதவித்திட்டம் 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுவதாக அறிவித்தார்.

.. வாய்ஸ் ..

மாற்றுத்திறன் கொண்ட முன்னாள் படைவீரர்களின் மாத நிதியுதவி 7 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் படுவதாகவும் கூறினார்.

வீரதீர செயல்புரிந்தவர்களுக்கான விருதுகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஆட்சித்தலைவர்கள்

திருச்சி உட்பட அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டதுடன், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினர்.

திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தில் துணைத் தலைமை இயக்குநர் செல்வி. அஜித்தா தேசிய கொடி ஏற்றி வைத்தார்.

தமிழகத்தின் அனைத்து அரசு நிறுவனங்களிலும் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.

திருச்சியில் உள்ள உப்பு சத்தியாகிரக நினைவு ஸ்தூபியில் தமிழ்நாடு வேதாரண்ய உப்புசத்தியாகிரக விழிப்புணர்வு இயக்கம் சார்பில் அதன் மாவட்ட செயலர் திரு. பி. தர்மராஜ் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

❖❖❖❖❖❖❖❖❖

கிராம சபை கூட்டங்கள்

சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழகத்தின் அனைத்து ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

பொதுநிதி செலவீனம், தணிக்கை அறிக்கை, தூய்மையான குடிநீர் விநியோகம் உறுதி செய்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் உள்ளிட்டவை குறித்து இதில் விரிவாக விவாதிக்கப் படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

16-வது உலககோப்பை ஹாக்கி போட்டிகள் நெதர்லாந்தில் இன்று தொடங்குகின்றன.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖